**ஜனவரி – 12**

# TNPSC துளிகள்

- நாடு முழுவதும் பதிவாகியுள்ள 1.60 லட்சத்திற்கும் மேற்பட்ட பாலியல் பலாத்கார வழக்குகளை விசாரிப்பதற்காக மொத்தம் 1,023 சிறப்பு விரைவு நீதிமன்றங்களை (fast-track special courts - FTSCs) அமைப்பதற்கு 24 மாநிலங்களும் ஒன்றியப் பிரதேசங்களும் ஒன்றிணைந்துள்ளன.
    - தேசியப் பெண்கள் பாதுகாப்புத் திட்டத்தின் (National Mission for Safety of Women - NMSW) ஒரு பகுதியாக இந்தச் சிறப்பு விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட இருக்கின்றன.
- பாகிஸ்தான் மற்றும் வங்க தேசம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த எல்லைகளின் முக்கிய பகுதிகளில் வெட்ட முடியாத (தகர்க்க முடியாத) எஃகு வேலியை இந்தியா அமைக்க இருக்கின்றது.
    - முதலாவது எஃகு வேலியானது வங்கதேசத்தின் எல்லைப் பகுதியான அசாமின் சில்ச்சாரில் 7 கி.மீ நீளத்திற்கு அமைக்கப்பட இருக்கின்றது. இந்த வேலி அமைப்பிற்குப் பின்பு அந்த எல்லையானது எல்லைப் பாதுகாப்புப் படையால் ஆய்வு செய்யப்பட இருக்கின்றது.

# தேசியச் செய்திகள்

## இந்தியா & ஜெர்மனி - விலையில்லா இயற்கை வேளாண்மை

- ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் விலையில்லா இயற்கை வேளாண்மையை (ZBNF - Zero Budget Natural Farming) நடைமுறைப் படுத்துவதற்காக அம்மாநில அரசு ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த ஒரு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- விலையில்லா இயற்கை வேளாண்மை என்பது வேதியியல் உரம் அல்லாத ஒரு விவசாய வேளாண் நடைமுறையாகும்.
- இந்திய அரசானது 2015 - 16 ஆம் ஆண்டு முதல் பரம்பரகத் கிருஷி விகாஸ் யோஜனா மற்றும் ராஷ்டிரிய கிருஷி விகாஸ் யோஜனா ஆகிய திட்டங்களின் மூலம் ZBNFஐ ஊக்குவித்து வருகின்றது.
- ZBNF ஆனது கர்நாடகா மாநிலத்தால் முதன்முதலில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டு வாக்கில் மாநிலத்தில் 100% இயற்கை விவசாயத்திற்கான இலட்சியத் திட்டத்தை அறிமுகப்படுத்திய முதலாவது மாநிலமாக ஆந்திரப் பிரதேசம் உருவெடுத்துள்ளது. இத்திட்டத்தை அம்மாநிலம் 2018 ஆம் ஆண்டில் உருவாக்கியது.

## இந்திய விமான நிலையங்களுக்கு சர்வதேச அங்கீகாரம்

- கார்பன் உமிழ்வு அளவைக் குறைத்ததற்காக 4 இந்திய விமான நிலையங்களுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளதாக இந்திய விமான நிலைய ஆணையம் (Airports Authority of India - AAI) அறிவித்துள்ளது.
- தரவரிசைப் படுத்துவதற்காக இந்தத் தரங்கள் ஆனவை விமான நிலைய ஆணைய சர்வதேச அமைப்பால் (Airports Council International - ACI) நிர்ணயிக்கப்பட்டுள்ளன.
- இந்த 4 விமான நிலையங்கள் பின்வருமாறு:

- நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் சர்வதேச விமான நிலையம் (மேற்கு வங்கம்)
- பிஜு பட்நாயக் சர்வதேச விமான நிலையம் (ஒடிசா)
- லால் பகதூர் சாஸ்திரி சர்வதேச விமான நிலையம் (உத்தரப் பிரதேசம்)
- திருவனந்தபுரம் சர்வதேச விமான நிலையம் (கேரளா).

## சங்கல்ப் நடவடிக்கை

- இந்தியக் கடற்படையானது வளைகுடா பிராந்தியத்தில் "சங்கல்ப் நடவடிக்கை" என்ற குறியீட்டுப் பெயர் கொண்ட ஒரு கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கையினைத் தொடங்கியுள்ளது.
- இந்த நடவடிக்கையானது ஹார்முஸ் ஜலசந்தி வழியாக இந்தியக் கொடியிடப்பட்ட கப்பல்கள் பாதுகாப்பாகச் செல்வதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்த நடவடிக்கையானது பின்வரும் மத்திய அமைச்சகங்கள் உட்பட அனைத்து பங்குதாரர்களுடனும் நெருக்கமான ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
  - மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சகம்,
  - மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம்,
  - மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சகம்,
  - மத்திய பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சகம்.


## பசுமை நன்மதிப்புத் திட்டம்

- வன ஆலோசனைக் குழுவானது (Forest Advisory Committee - FAC) இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது "காடுகளை" ஒரு பொருளாக வர்த்தகம் செய்ய அனுமதிக்கின்றது.
- இது தனது (வனத் துறை) பொறுப்புகளில் ஒன்றான காடுகளை ஏற்படுத்தும் பணியை அரசு சாரா நிறுவனங்களுக்கு வழங்க வனத் துறையை அனுமதிக்கின்றது.
- FAC என்பது வணிக நோக்கங்களுக்காக வன நிலங்களை அழிப்பதற்கு தொழில் துறையினால் வைக்கப்படும் கோரிக்கைகளை தீர்ப்பதற்கான ஒரு தலைமை அமைப்பாகும்.
- இதற்கு முன்பு 2015 ஆம் ஆண்டில், பொது - தனியார் பங்களிப்புடன் சீரழிந்த வன நிலங்களுக்காக 'பசுமை நன்மதிப்புத் திட்டமானது' பரிந்துரைக்கப்பட்டது.
- ஆனால் இறுதி ஒப்புதல் வழங்கும் அதிகாரத்தில் இருக்கும் மத்திய சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சரால் இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட வில்லை.

## இந்தியாவின் எரிசக்திக் கொள்கை - அறிக்கை

- சர்வதேச எரிசக்தி நிறுவனமானது (International Energy Agency - IEA) இந்தியாவின் எரிசக்திக் கொள்கை என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- நிதி ஆயோக்கின் தேசிய எரிசக்திக் கொள்கையை இந்தியா ஏற்க வேண்டும் என்று இந்த அறிக்கை வலியுறுத்தியுள்ளது.

- IEA தனது "இந்திய அறிக்கை 2020" என்பதனை நிதி ஆயோக் நிறுவனத்துடன் இணைந்து வெளியிட்டுள்ளது.
- இந்தியாவின் எண்ணெய் தேவையானது 2020 ஆம் ஆண்டின் ஜூன் – ஜூலை மாதங்களில் சீனாவை முந்தும் (எண்ணெய்த் தேவை அதிகமாக இருக்கும்) என்று இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக மூன்றாவது பெரிய எண்ணெய் நுகர்வோர் நாடாக இந்தியா விளங்குகின்றது என்றும் இந்த அறிக்கை கூறியுள்ளது.
- உலகின் நான்காவது பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நாடாக இந்தியா விளங்குகின்றது.
- இந்த சுத்திகரிப்புப் பொருள்களில் டீசல் மற்றும் பெட்ரோல் ஆகியவை அடங்கும்.




# சர்வதேசச் செய்திகள்

## நேபாளத்தின் சேக் மொழி

- அழிந்து போகும் நிலையில் உள்ள 'சேக்' என்ற நேபாள மொழியை உலகம் முழுவதும் 700 நபர்கள் மட்டுமே பேசுகின்றனர்.
- சேக் என்றால் பொன்னான மொழி என்று பொருள்படும்.
- இது நேபாளத்தில் இருக்கும் 100க்கும் மேற்பட்ட பூர்வீக மொழிகளில் ஒன்றாக விளங்குகின்றது.
- நேபாளத்தின் அலுவல்பூர்வ மொழியான நேபாளி மொழியின் காரணமாக சேக் மொழியானது அழிந்து கொண்டிருக்கின்றது.
- இது யுனெஸ்கோ அமைப்பின் ஆபத்து நிலையில் உள்ள உலக மொழிகளின் பட்டியலின் கீழ் "நிச்சயமாக ஆபத்து நிலையில்" உள்ள மொழியாகக் கருதப் படுகின்றது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபை 2019 ஆம் ஆண்டினை சர்வதேசப் பூர்வீக மொழிகள் ஆண்டாக அனுசரித்தது.

| | Degree of endangerment | Intergenerational Language Transmission |
|---|---|---|
| | safe | language is spoken by all generations; intergenerational transmission is uninterrupted >> not included in the Atlas |
| ⚲ | vulnerable | most children speak the language, but it may be restricted to certain domains (e.g., home) |
| ⚲ | definitely endangered | children no longer learn the language as mother tongue in the home |
| ⚲ | severely endangered | language is spoken by grandparents and older generations; while the parent generation may understand it, they do not speak it to children or among themselves |
| ⚲ | critically endangered | the youngest speakers are grandparents and older, and they speak the language partially and infrequently |
| ⚲ | extinct | there are no speakers left >> included in the Atlas if presumably extinct since the 1950s |

# பொருளாதாரச் செய்திகள்

## உங்களது வாடிக்கையாளரை அறிந்து கொள்வதற்காக V - CIP


- இந்திய ரிசர்வ் வங்கியானது முதன்முறையாக ஆதாரை மையமாகக் கொண்ட காணொளி மூலம் வாடிக்கையாளர் அடையாளச் செயல்முறையை (Video Customer Identification Process - V-CIP) அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்த செயல்முறையானது வங்கிகளிலும் பிற கடன் வழங்குநர்களிடமும் பரிவர்த்தனை மேற்கொள்ளும் வாடிக்கையாளர்களின் KYC (உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் - Know Your Customer) செயல்முறையைக் காணொளி மூலம் மேற்கொள்ள அனுமதிக்க இருக்கின்றது.
- ஏற்கனவே பயன்பாட்டில் இருக்கும் மின்னணு முறையிலான KYC வசதிக்கு மாற்றாக இந்த வசதியைப் பயன்படுத்த முடியும்.
- V-CIPஐ அறிமுகப்படுத்த, பணமோசடி தடுப்பு (பதிவுகளைப் பராமரித்தல்) விதிகள், 2005ன் கீழ் உள்ள வழிகாட்டுதல்களை இந்திய ரிசர்வ் வங்கி திருத்தியுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## தாய்மடித் திட்டம்

- ஆந்திரப் பிரதேச மாநில முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி சித்தூரில் தாய்மடித் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இத்திட்டமானது ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களுக்கு (அரசு மற்றும் தனியார் பள்ளிகளை உள்ளடக்கிய) பயனளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மாணவர்கள் ஆண்டிற்கு ரூ. 15,000 நிதியுதவியைப் பெற இருக்கின்றனர்.
- இருப்பினும், குழந்தையின் பாதுகாவலர் அல்லது அக்குழந்தையின் தாய் அந்த மாணவர்களின் 75% பள்ளி வருகையை உறுதி செய்ய வேண்டும்.
- இத்திட்டத்தின் கீழ் மாநில அரசு ரூ. 6318 கோடியை ஒதுக்கியுள்ளது.

- குழந்தைகள் 12 ஆம் வகுப்பை முடிக்கும் போது இந்தத் தொகையானது நேரடியாக அக்குழந்தையின் தாய்மார்களின் வங்கிக் கணக்குகளுக்கு மாற்றப்பட இருக்கின்றது.




## அருணாச்சலப் பிரதேச மாநிலத்திற்கான ஒரு புதிய சின்னம்


- அருணாச்சலப் பிரதேச மாநில சட்டமன்றமானது அம்மாநிலத்தின் தனித்துவமான அடையாளத்தையும் கலாச்சாரத்தையும் பிரதிபலிக்கும் ஒரு புதிய சின்னத்தை ஏற்றுக் கொண்டுள்ளது.
- இந்தப் புதிய சின்னமானது பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது:
    - இந்திய அரசியலமைப்பின் கூட்டாட்சி அமைப்பைக் குறிக்கும் தேசிய சின்னம்.
    - அருணாச்சலப் பிரதேச மாநிலத்தையும் அதன் மக்களையும் கலாச்சாரத்தையும் குறிக்கக் கூடிய ஃபாக்ஸ்டைல் மந்தாரைப் பூ (ரைன்கோஸ்டைலிஸ் ரெட்டூசா).
    - நீல வண்ணமானது சட்டசபைச் செயலகத்தின் சுயாட்சியைக் குறிக்கின்றது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## முப்பவரப்பு வெங்கையா நாயுடு தேசிய விருது

- வேளாண் விஞ்ஞானியான டாக்டர் எம் எஸ் சுவாமிநாதன் மற்றும் சமூக சேவகர் டாக்டர் குட்டா முனிரத்னம் ஆகியோர் முப்பவரப்பு வெங்கையா நாயுடு தேசிய சிறப்புமிகு விருதுக்கான முதலாவது வெற்றியாளர்களாகத் தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.
- தெலுங்கானாவில் உள்ள ஹைதராபாத்தில் நடத்தப்பட்ட ஒரு விழாவில் இந்த விருது அவர்களுக்கு வழங்கப்பட்டது.




# முக்கிய தினங்கள்

## உலக இந்தி தினம் - ஜனவரி 10

- வெளிநாடுகளில் இந்தி மொழியின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் உலக இந்தி தினமானது அனுசரிக்கப்படுகின்றது.
- மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்கள் ஆகியவை ஆண்டுதோறும் இத்தினத்தை அனுசரிக்கின்றன.
- 2006 ஆம் ஆண்டு ஜனவரி 10 அன்று முதலாவது உலக இந்தி மாநாடானது நாக்பூரில் நடைபெற்றது.
- உலகில் பேசப்படும் மொத்த மொழிகளில் அதிகம் பேசப்படும் ஐந்தாவது மொழி இந்தி ஆகும்.
- 'தேசிய இந்தி தினமானது ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 14 அன்று கொண்டாடப் படுகின்றது.
- அரசியலமைப்பு சபையானது 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 அன்று இந்தி மொழிக்கு அலுவல்பூர்வ மொழி என்ற அங்கீகாரத்தை வழங்கியது.




# இதரச் செய்திகள்

## மாநில எரிசக்தித் திறன் குறியீடு - 2019


- எரிசக்தித் திறன் அமைப்பானது (Bureau of Energy Efficiency - BEE) 2019 ஆம் ஆண்டிற்கான மாநில எரிசக்தித் திறன் குறியீட்டை வெளியிட்டுள்ளது.
- நிலக்கரி, மின்சாரம், எரிவாயு மற்றும் எண்ணெய் போன்ற அடிப்படை எரிசக்தித்

தேவைகளை கருத்தில் கொண்டு இந்த அறிக்கையானது தயாரிக்கப்பட்டுள்ளது.

- 97 குறிகாட்டிகளின் அடிப்படையில் 36 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் ஆகியவற்றில் எரிசக்தித் திறன் முன்னெடுப்புகளின் செயல்பாடுகளை இந்த அறிக்கை ஆய்வு செய்துள்ளது.
- இந்த அறிக்கையின் படி, கர்நாடகா, இமாசலப் பிரதேசம், ஹரியானா மற்றும் புதுச்சேரி ஆகியவை சிறப்பாகச் செயல்படும் (சாதனையாளர் பிரிவு) மாநிலங்களாக /ஒன்றியப் பிரதேசங்களாக விளங்குகின்றன.
- மணிப்பூர், ஜார்க்கண்ட், ராஜஸ்தான் மற்றும் ஜம்மு காஷ்மீர் ஆகியவை மிகக் குறைந்த செயல்திறன் (இலக்கை அடைய வேண்டிய பிரிவு) கொண்டவையாக விளங்குகின்றன.
- இந்த ஆண்டில், BEE ஆனது அதன் குறிகாட்டிகளில் ஒன்றாக எரிசக்திப் பாதுகாப்புக் கட்டிடக் குறியீட்டையும் சேர்த்துள்ளது.

***எரிசக்தித் திறன் அமைப்பு (BEE)***

- BEE என்பது மத்திய மின்சாரத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- இது இந்தியப் பொருளாதாரத்தில் எரிசக்தியின் தேவையைக் குறைப்பதற்கான முதன்மை நோக்கத்துடன் கொள்கைகள் மற்றும் உத்திகளை மேம்படுத்துவதற்கு உதவுகின்றது.




* For State EE Index 2019, unified Jammu & Kashmir and Ladakh have been considered.

## காலனித்துவ காலத்தைச் சேர்ந்த கட்டமைப்புகள் - கொல்கத்தா

- கொல்கத்தாவில் உள்ள பழமையான நாணயக் கட்டிடம், மெட்கால்ஃப் அரண்மனை, பெல்வெடெர் அரண்மனை மற்றும் விக்டோரியா நினைவு மண்டபம் ஆகியவற்றை பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணித்தார்.
- இந்தக் கட்டிடங்கள் மத்தியக் கலாச்சாரத் துறை அமைச்சகத்தினால் புதுப்பிக்கப்

பட்டன.

- இந்திய ரிசர்வ் வங்கியானது 1937 ஆம் ஆண்டு வரை நாணயக் கட்டடத்தில் இயங்கியது. அதன் பின்னர் இந்திய ரிசர்வ் வங்கியானது வேறு இடத்திற்கு மாற்றப் பட்டது.
- இந்தக் கட்டிடத்திற்கு இந்தியாவின் தலைமை ஆளுநரான மெட்காஃப் என்பவரின் நினைவாக இப்பெயர் இடப்பட்டுள்ளது.
- பெல்வெடெர் அரண்மனையானது மீர் ஜாபரின் அரண்மனையாக விளங்கியது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★